ALL INDIA RADIO - TIRUCHIRAPPALLI

# மாநிலச் செய்திகள்

நேரம்: 01.45 pm

**26.01.2024**

## தலைப்புச்செய்திகள்

1. **நாட்டின் 75-வது குடியரசு தின விழா இன்று** வழக்கமான உற்சாகத்துடன், கோலாகலமாக கொண்டாடப்படுகிறது.

2. குடியரசுத்தலைவர் திருமதி. திரௌபதி முர்மு புதுதில்லி கர்த்தவ்ய பாதையில் தேசிய கொடியை பறக்கவிட்டு முப்படைகளின் அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக்கொண்டார்

3. **பிரதமர் திரு.நரேந்திரமோதி தேசிய போர் நினைவு** சின்னத்தில் நாட்டிற்காக இன்னுயிர் ஈந்த வீரர்களுக்கு மலர்வளையம் வைத்து அஞ்சலி செலுத்தியதை அடுத்து குடியரசு தின அணிவகுப்பு தொடங்கியது.

4. தமிழக ஆளுநர் திரு. **R.N.** ரவி, **சென்னை மெரினா** கடற்கரை சாலையில் நடைபெற்ற குடியரசுதின விழாவில் தேசிய கொடியை பறக்கவைத்து முப்படையினரின் அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக்கொண்டார்.

5. தமிழ்நாட்டில் அனைத்து மாவட்ட தலைநகரங்களிலும் ஆட்சித்தலைவர்கள் தேசிய கொடியை ஏற்றிவைத்து காவல்துறையினரின் அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக்கொண்டனர்.

## இனி விரிவான செய்திகள்

❖❖❖❖❖❖❖❖

### குடியரசு தினம்

**நாட்டின் 75-வது குடியரசு தின விழா இன்று** கோலாகலமாகவும், தேசப்பற்றுடனும் கொண்டாடப்படுகிறது

குடியரசுத்தலைவர் திருமதி. திரௌபதி முர்மு புதுதில்லி கர்த்தவ்ய பாதையில் தேசிய கொடியை பறக்கவிட்டு முப்படைகளின் அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக்கொண்டார்

..மியூசிக்..

பிரெஞ்ச் அதிபர் இம்மானுவேல் மேக்ரான் சிறப்பு விருந்தினராக பங்கேற்ற 75-வது குடியரசு தின விழா நாட்டின் கலாச்சார பன்முகத்தன்மை, ஒற்றுமை, ஒருமைப்பாடு, வளர்ச்சி, ராணுவத்திறன், மகளிர் சக்தியை பறைசாற்றுவதாக திகழ்ந்தது.

**பிரதமர் திரு.நரேந்திரமோதி தேசிய போர் நினைவு** சின்னத்தில் நாட்டிற்காக இன்னுயிர் ஈந்த வீரர்களுக்கு மலர்வளையம் வைத்து அஞ்சலி செலுத்தியதுடன் குடியரசு தின விழா இனிதே தொடங்கியது.

.. மியூசிக் ..

இதனை தொடர்ந்து பிரதமர் உள்ளிட்ட அனைத்து பிரதிநிதிகளும் குடியரசு தின அணிவகுப்பை கர்த்தவ்ய பாதையிலிருந்து பார்வையிட்டனர்.

விக்சித் பாரத், **நமது லட்சியம் வளர்ச்சியடைந்த பாரதம், இந்தியா ஜனநாயகத்தின் தாய்** என்ற இரு கருப்பொருள்களை மையமாக வைத்து நடைபெறும் குடியரசு தின விழாவில் 13 ஆயிரம் சிறப்பு விருந்தினர்கள் பங்கேற்றனர்.

இதன்மூலம் அனைத்து துறை மற்றும் அலகுகளை சார்ந்த பல்வேறு தரப்பினர் பெருமைமிகு தேச விழாவில் பங்கேற்க சிறப்பான வாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது.

முன்னதாக குடியரசு தலைவர் திருமதி. திரௌபதி முர்முவும், சிறப்பு விருந்தினரான பிரான்ஸ் அதிபர் இம்மானுவேல் மேக்ரானும், குடியரசு தலைவரின் பாதுகாவலர்கள் புடைசூழ, குதிரை பூட்டப்பட்ட ரதத்தில் கர்த்தவ்ய பாதையை வந்தடைந்தனர்.

40 ஆண்டுகளுக்கு பிறகு குதிரை பூட்டப்பட்ட ரதத்தில் அழைத்துவரும் பாரம்பரிய முறை எழுச்சி பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கது.

நாட்டின் பாரம்பரிய வழக்கப்படி தேசியகொடி வானில் பறக்கவிட பட்டபோது 21 குண்டுகள் முழங்க தேசிய கீதம் இசைக்கப்பட்டது.

.. **மியூசிக்** ..

வானில் பறந்த 4 மிக் -17 ரக ஹெலிகாப்டரிலிருந்து கர்த்தவ்ய பாதையின் மீது மலர் இதழ்கள் தூவப்பட்டன.

இதனைத்தொடர்ந்து பல்வேறு மாநிலங்களின் கலாச்சாரங்களையும், மகளிர் சக்தியையும் பிரதிபலிக்கும் வகையில் பெண்கள் இசைத்த சங்கு, நாதஸ்வரம் உள்ளிட்ட பல்வேறு வாத்தியங்களின் இசை நிகழ்வு இடம்பெற்றது.

.. **மியூசிக்** ..

தொடர்ந்து குடியரசு தின அணிவகுப்பு பிரம்மாண்டமாக கர்த்தவ்ய பாதையில் மிடுக்குடன் தொடங்கியது.

முப்படைகளை சேர்ந்த முழுவதும் பெண்கள் பங்கேற்ற சிறப்பு அணிவகுப்பு இதில் இடம்பெற்றது.

தமிழகத்தின் சார்பில் இடம்பெற்ற அலங்கார ஊர்தியில் பழங்காலத்தில் பின்பற்றப்பட்ட குடவோலைமுறை, உத்தரமேரூர் கல்வெட்டு போன்றவை காட்சிப்படுத்தப்பட்டன

.. **மியூசிக்** ..

இஸ்ரோ சார்பில் ‘**சந்திரயான் - 3 வெற்றி பயணம்**’ மின்னனு மற்றும் தகவல் தொழில்நுட்பத்துறை சார்பில் ‘**சமூக மேம்பாட்டிற்கு செயற்கை நுண்ணறிவின் பொறுப்புணர்வு**’ தேர்தல் ஆணையத்தின் சார்பில் ‘**இந்தியா ஜனநாயகத்தின் தாய்**’ மற்றும் நீர்வழிப்போக்குவரத்தின் ‘**சாகர்மாலா திட்டம்**’, ‘**ஜி-20 மாநாட்டின் வெற்றி**’ உள்ளிட்ட தலைப்புகளில் அணிவகுத்து சென்ற அலங்கார ஊர்திகள் அனைவரையும் வெகுவாக கவர்ந்தன.

பிரான்ஸ் நாட்டை சேர்ந்த ராணுவப்படையின் வாத்திய இசையும் அணிவகுப்பும் எழுச்சியுடன் நடைபெற்றது.

பீஷ்மா **T-90** பீரங்கி, நாஹ் ஏவுகணை முறை, காலாட்படை, பீனாக்கா, ஆயுதங்களை கண்டறியும் ரேடார் முறை, சுவாதி, அலைபேசி இணைப்பு முறை,

ட்ரோன் தொழில்நுட்பம், நிலத்திலிருந்து வானில் ஏவப்படும் ஏவுகணைகள் உள்ளிட்டவை இந்த ஆண்டு அணிவகுப்பின் சிறப்பம்சங்களாகும்

நாட்டின் கலாச்சாரத்தையும் படைப்பாற்றல் திறனை வெளிப்படுத்தும் வகையில் 16 மாநிலங்கள், யூனியன் பிரதேசங்களின் 9 அமைச்சகங்களின் அலங்கார ஊர்தி காட்சியமைப்பு அனைவரும் ஆரவாரத்துடன் கண்டுகளித்தனர்.

அணிவகுப்பின் முத்தாய்ப்பாக அனைவரும் மிகவும் எதிர்பார்த்திருந்த வான் சாகச நிகழ்ச்சியில், 54 நவீன போர் விமானங்களும், ஹெலிகாப்டர்களும் வான் மண்டலத்தை அலங்கரித்தன.

பிரான்ஸ் விமானப்படையின் 3 போர் விமானங்கள், இந்திய விமானப்படையின் 46 நவீன விமானங்கள், இந்திய கடற்படையின் 1 போர்விமானம், இந்திய ராணுவத்தின் 4 ஹெலிகாப்டர்களை உள்ளடக்கி நடைபெற்ற இந்த சாகச நிகழ்ச்சிகள் அனைவரையும் பரவசப்படுத்தியது.

திரிசூல் வடிவமைப்பு மற்றும் விஜய் வான் அணிவகுப்பு நம் நாட்டின் விமானப்படையின் பலத்தை பறைசாற்றியது.

.. மியூசிக் ..

❖❖❖❖❖❖❖❖

**R.N.** ரவி

**சென்னை மெரினா** கடற்கரை சாலையில் நடைபெற்ற குடியரசுதின விழாவில் தமிழக ஆளுநர் திரு. **R.N.** ரவி தேசிய கொடியை பறக்கவைத்து முப்படையினரின் அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக்கொண்டார்.

.. மியூசிக் ..

❖❖❖❖❖❖❖❖

**முதலமைச்சர் விருது**

இந்நிகழ்ச்சியில் பங்கேற்ற முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் வீரதீர செயலுக்கான அண்ணா பதக்கம், கோட்டைஅமீர் மத நல்லிணக்க பதக்கம், காந்தியடிகள் காவலர் பதக்கங்கள், சிறந்த காவல் நிலையத்திற்கான கோப்பைகள் ஆகியவற்றை தேர்ந்தெடுக்கப்பட்டோருக்கு இன்று வழங்கி கௌரவித்தார்.

ஊடகவியலாளர் முகமது ஜுபேருக்கு மதநல்லிணக்கத்திற்கான சிறப்பு விருதையும்,

அரசு பள்ளிக்கு நிலத்தை நன்கொடையாக வழங்கிய திருமதி. ஆயி அம்மாளுக்கு முதலமைச்சரின் சிறப்பு விருதையும் முதலமைச்சர் வழங்கினார்.

❖❖❖❖❖❖❖❖

**குடியரசு தினம் திருச்சி**

தமிழ்நாட்டில் அனைத்து மாவட்ட தலைநகரங்களிலும் ஆட்சித்தலைவர்கள் தேசிய கொடியை ஏற்றிவைத்து காவல்துறையினரின் அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக்கொண்டனர்.

**திருச்சி மாவட்ட ஆயுதப்படை மைதானத்தில்** ஆட்சித்தலைவர் திரு.மா.பிரதீப்குமார் தேசிய கொடியை ஏற்றிவைத்து, காவல்துறையினரின் அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக்கொண்டார்.

.. மியூசிக் ..

இந்நிகழ்ச்சியில் 14 காவலர்களுக்கு குடியரசு தின பதக்கங்களையும், 432 பேருக்கு பாராட்டு சான்றிதழ்களையும் வழங்கினார்.

தஞ்சாவூர் மாவட்டத்தில் நடைபெற்ற குடியரசு தின விழாவில் தேசிய கொடியை ஏற்றி வைத்த ஆட்சித்தலைவர் திரு.தீபக் ஜேக்கப், 129 பயனாளிகளுக்கு, 47 லட்சரூபாய் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

**பெரம்பலூர் மாவட்டத்தில் ஆட்சித்தலைவர்** திருமதி. கற்பகம் தேசிய கொடி ஏற்றிவைத்து 123 பயனாளிகளுக்கு 43 லட்சரூபாய் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

**நாமக்கல் மாவட்டத்தில் சுதந்திர போராட்ட** தியாகிகளின் வாரிசுதாரர்களை சிறப்பிக்கும் வகையில் ஆட்சித்தலைவர் டாக்டர் உமா பரிசுகள் வழங்கி பாராட்டினார்.

**சேலம் மாவட்டத்தில் தேசிய கொடியை ஏற்றிய** ஆட்சித்தலைவர் திரு. கார்மேகம், காவல்துறையினரின் அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக்கொண்டார்.

**மதுரை மாவட்டத்தில் நடைபெற்ற குடியரசு தின** விழா நிகழ்ச்சியில் காவல்துறையில் சிறப்பாக பணியாற்றிய 210 காவலர்களுக்கு பதக்கங்களை வழங்கி கௌரவித்த ஆட்சித்தலைவர் திருமதி. சங்கீதா, பல்வேறு துறைகளில் சிறப்பாக பணியாற்றிய 250 அலுவலர்களுக்கு பாராட்டு சான்றிதழ்களை வழங்கினார்.

**கன்னியாகுமரி மாவட்டத்தில் தேசிய கொடியை** ஏற்றிவைத்த ஆட்சித்தலைவர் திரு. ஸ்ரீதர், மூவர்ண பலூன்களை பறக்கவிட்டார்.

**திண்டுக்கல் மாவட்டத்தில்** ஆட்சித்தலைவர் திருமதி. பூங்கொடி தலைமையில் நடைபெற்ற குடியரசு தின விழாவில் 500-க்கும் மேற்பட்ட பள்ளி மாணாக்கர் பங்கேற்ற கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

**சிவகங்கை மாவட்டத்தில் ஆட்சித்தலைவர்** திருமதி. ஆஷாஅஜித் தேசிய கொடியை ஏற்றிவைத்து 82 லட்சம் ரூபாய் மதிப்பிலான நலத்திட்டங்களை பயனாளிகளுக்கு வழங்கினார்.

**திருப்பத்தூர் மாவட்டத்தில் தேசிய கொடியை** ஏற்றிவைத்த ஆட்சித்தலைவர் திரு.பாஸ்கர பாண்டியன் 27 காவலர்களுக்கு பதக்கங்கள் வழங்கி சிறப்பித்தார்

**கரூர்,** அரியலூர், காஞ்சிபுரம், கிருஷ்ணகிரி, தேனி, கடலூர், நாகை உள்ளிட்ட அனைத்து மாவட்ட தலைநகரங்களிலும் அந்தந்த மாவட்ட ஆட்சித்தலைவர்கள் தேசிய கொடியை ஏற்றிவைத்து காவல்துறையினரின் அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக்கொண்டனர்.

❖❖❖❖❖❖❖❖

**திருச்சி கொடியேற்றம்**

திருச்சி அகில இந்திய வானொலி நிலையம், ரயில் நிலையம் சுங்கத்துறை அலுவலகம், திருச்சி பாரத மிகு மின் நிறுவனம், திருச்சி மாநகராட்சி உட்பட மத்திய மாநில அரசு அலுவலகங்களில் தேசிய கொடி இன்று ஏற்றப்பட்டது.

❖❖❖❖❖❖❖❖

**எல்.முருகன்**

கோவை மாவட்டம் காரமடை பகுதியில் தனியார் பள்ளியில் நடைபெற்ற 75-வது குடியரசு தின விழாவில் மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல்.முருகன், தேசிய கொடியை ஏற்றி வைத்து, உறுதி மொழி ஏற்றுக்கொண்டார்

மாணாக்கரின் கலை நிகழ்ச்சிகளையும் பார்வையிட்டார்

தேசத்தை வரும் 2047-ம் ஆண்டிற்குள் வளர்ந்த நாடாக உருவாக்குவதில் இளைஞர்களின் பங்கு இன்றியமையாதது என்று கூறினார்.

கடந்த 10 ஆண்டுகளில் பிரதமர் மேற்கொண்ட பல்வேற நடவடிக்கைகளால் உலக பொருளாதாரத்தில் இந்தியா 5-வது இடத்தில் உள்ளதாக பெருமிதம் தெரிவித்தார்.

❖❖❖❖❖❖❖❖

**இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது**